தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்

**கல்வி அமைச்சு**

| 60 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| வணிகக்கல்வியும் கணக்கீடும் - II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

**வணிகக்கல்வியும் கணக்கீடும் - II**

*அறிவுறுத்தல்கள்.*

- *முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*
- *அறிவுறுத்தலுக்கமைய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*

பின்வரும் சம்பவக் கற்கையினைப் பயன்படுத்தி (I) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

*யாழ்ப்பாணத்தில் நகர்ப்புறத்தில் வசிக்கும் வித்யா என்பவர் அழகுக்கலை டிப்ளோமா பட்டம் பெற்றவராவார். குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது வீட்டு விசேட வைபவங்களை இதற்கென வடிவமைக்கப்பட்ட மண்டபங்களில் நடாத்துவதுடன், தம்மை அழகுபடுத்துவதில் ஆர்வம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றினை கருத்தில் கொண்ட வித்யா தனது சொந்தக் காசினையும் ரூபா 500,000 பெறுமதியான சொந்த கட்டடம் ஒன்றையும் மூலதனமாக ஈடுபடுத்தி 01.01.2022 இல் "Good Look" என்னும் பெயரில் ஒப்பனைக் கலை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார்.*

மேலும் வணிகத்தினை விஸ்தரிக்கும் நோக்கில் இரண்டு ஊழியர்களை வேலைக்கமர்த்தி விழா வைபவங்களுக்கேற்ற பூமாலைகள், பூங்கொத்துக்கள், அலங்கார வளைவுகள் என்பவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றார். இதற்கு தேவையான இயற்கை மலர்களை நுவரெலியாவில் உள்ள "சாமந்தி" மலர்கள் விற்பனை நிலையத்திலிருந்து இதற்கென வடிவமைக்கப்பட்ட வாகனங்களின் மூலம் பெற்றுக் கொள்கின்றார். தனது தயாரிப்புக்களுக்கான கட்டளைகளை தொலைபேசி மூலம் பெறுவதுடன், மலர்களுக்கான கட்டளையினை இமெயில் (Email) மூலம் அனுப்புகிறார்.

ஜனவரி மாதத்தில் 'Good look' வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட காசுக்கணக்கு கீழே தரப்படுகிறது.

| திகதி | பற்.சீ. | விபரம் | பே.ப | தொகை | திகதி | இ.சா.சீ | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01/2022 | | மூலதனம் | | ***100000*** | 02/01/2022 | | அழகுக்கலை உபகரணம் கொ/வு | | ***50000*** |
| 01/01/2022 | | 12% வங்கிக்கடன் | | ***200000*** | 05/01/2022 | | பூக்கள் கொள்வனவு | | ***40000*** |
| 10/01/2022 | | பூமாலை விற்பனை | | ***50000*** | 10/01/2022 | | விளம்பரம் | | ***2000*** |
| 25/01/2022 | | அழகுக்கலை சேவை வரு-மானம் | | ***100000*** | 15/01/2022 | | தொலைபேசிக் கட்டணம் | | ***3000*** |
| | | | | | 18/01/2022 | | பற்று | | ***2000*** |
| | | | | | 25/01/2022 | | சம்பளம் | | ***30000*** |
| | | | | | 31/01/2022 | | மீ/கீ /கொ/செ | | ***323000*** |
| | | | | ***450000*** | | | | | ***450000*** |

- **மேலதிக தகவல்கள்**

  1. வங்கிக்கடன் வட்டி செலுத்தப்படவில்லை.
  2. 20/01/2022 இல் கடனுக்கு பூக்கள் கொள்வனவு ரூ10000
  3. 27/01/2022 இல் கடனுக்கு பூமாலைகள் விற்பனை ரூ 5000
  4. கட்டடம் மற்றும் உபகரணங்களுக்க 6% வருடாந்தம் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.
  5. பூமாலைகள் உடனே விற்பனை செய்யப்படுவதால் இருப்புக்கள் இல்லை.

I . அ. ஒப்பனைக்கலை மூலம் மனிதனின் எத்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது

ஆ. 'Good Look' வணிகத்தின் பலம் ஒன்றினையும், வாய்ப்பு ஒன்றினையும் குறிப்பிடுக.

II. அ. 'Good Look' ஒப்பனைக்கலை நிலையம் எத்தகைய வணிக அமைப்பைச் சார்ந்தது.

ஆ. மேற்படி வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் தருக.

III. மேற்படி சம்பவத்திலிருந்து பின்வரும் வணிகங்களுக்க உதாரணம் தருக.

1. சில்லறை வியாபாரம்.
2. மொத்த வியாபாரம்.
3. பொருள் உற்பத்தி வணிகம்.
4. சேவை உற்பத்தி வணிகம்.

IV. அ. வித்யா தனது வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு உதவியாக பயன்படுத்திய தொடர்பாடல் சாதனங்களை குறிப்பிடுக.

ஆ. பூக்கள் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் சாதனம் ஒன்றினைத் தெரிவு செய்யும் பொது கவனத்தில் கொள்ள வெண்டிய விடயங்கள் இரண்டு தருக.

V. 01.01.2022 இல் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாட்டை தொகைகளுடன் தருக.

VI. அ. மேற்படி வணிகத்தினால் காசேடு தவிர்ந்து பயன்படுத்தப்படும் மூல ஏடுகள் இரண்டினை குறிப்பிடுக.

ஆ. ‘ Good Look’ வணிகத்தின் உரிமையாண்மையில் குறைவை ஏற்படுத்தும் விடயங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.

VII. அ. அட்டுறு வங்கிக்கடன் வட்டிக்கான இரட்டைப்பதிவினை தொகைகளுடன் தருக.

ஆ. வணிகத்தின் பின்வரும் சொத்துக்களுக்கு ஒவ்வோர் உதாரணம் தொகைகளுடன் தருக.

1. நடைமுறைச் சொத்து (31.01.2022 இல்)

2. நடைமுறையல்லாச் சொத்து (தேறிய பெறுமதி 31.01.2022 இல்)

VIII. அ. ‘Good Look’ வணிகத்தின் மொத்தக் கொள்வனவின் பெறுமதி யாது?

ஆ. Good Look வணிகத்தின் மொத்த வருமானத்தின் பெறுமதி யாது?

IX. 31.01.2022 இல் முடிவடைந்த மாதத்திற்கான ‘Good Look’ வணிகத்தின் தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

X. ‘Good Look’ வணிகத்தின்

அ. 31.01.2022 இல் இருந்தவாறான உரிமையாண்மையின் தொகை எவ்வளவு?

ஆ. 31.01.2022 இல் இருந்தவாறான மொத்த பொறுப்புக்களின் தொகை எவ்வளவு?

## பகுதி - 1 வணிகக்கல்வி

- **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**2.** I. அ. ‘போட்டியாளர்’ எனக் கருதப்படுபவர் யார்?

ஆ. உள்நாட்டு வணிகத்தில் பூகோள மயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக. (2 புள்ளி)

II. பின்வரும் கூற்றுகள் உண்மையா? பொய்யா? என்பதனைக் குறிப்பிடுக.

அ. மனிதத்தேவைகளை பூர்த்தி செய்கின்ற பல்வேறுபட்ட முறைகள் ‘விருப்பங்கள்’ எனப்படும். (……………..)

ஆ. உரிமையாளர்களின் நிதிப்பலம் குறைவாக இருத்தல் வணிகமென்றிற்கு அச்சுறுத்தலாகும். (……………..)

இ. அரச துறை வணிக அமைப்புக்களில் தனிமனித அந்தஸ்து காணப்படுகின்ற அமைப்பு அரச கூட்டுத்தாபனங்கள் ஆகும். (……………..)

ஈ. அங்கத்தவர்களுக்கு சமமான உரிமையும், ஜனநாயக நிருவாகமும் காணப்படுகின்ற அமைப்பு பங்குடமை வணிகமாகும். (……………..)

(2 புள்ளி)

III. பின்வரும் செய்திகள் பிரபல பத்திரிகையில் காணப்பட்டவையாகும்

அ. 1) 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் வரவு செலவுத்திட்டம் 37 மேலதிக வாக்குக்களினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2) உள்ளூராட்சி நிறுவனங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்கூறிய செய்திகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் வணிகச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

ஆ. கீழே வணிக அமைப்புக்களுக்கான உதாரணங்கள் தரப்படுகின்றன

1) இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை

2) மதுரன் பல்பொருள் வாணிபம்

மேற்படி வணிகங்கள் எவ்வகையான வணிக அமைப்புக்குள் உள்ளடங்குகின்றன என்பதைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

IV. ஆறுமுகம் என்பவர் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் ஒன்றினை குறைந்த வட்டி வீதத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கியிலிருந்து பெற்று விலங்குப்பண்ணை ஒன்றினை நடாத்தி வருகிறார்.

அ. மேற்கூறிய சம்பவத்தில் இனங்காணக்கூடிய சூழல்க்காரணி ஒன்றினைக் குறிப்பிடுக.

ஆ. மேற்படி விடயத்தில் வெளிப்படுத்தப்படும் கிராமிய வங்கி வணிக அமைப்பின் மூலம் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

**3.** I. அ. காசோலை ஒன்றில் ‘புறக்குறிப்பிடுதல்’ என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது?

ஆ. காசோலையில் புறக்குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

II. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? என்பதனைக் குறிப்பிடுக.

அ. வங்கிக் கணக்கிலுள்ள காசு மீதிக்கு மட்டும் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்கு இயலுமான அட்டை வரவட்டையாகும். (……………..)

ஆ. ஆதனம், ஆயுள் என்பவற்றுக்கு காப்புறுதி செய்வதனால் அவற்றுக்கான இடர்கள் ஏற்படாதிருக்கும். (……………..)

இ. செய்தியைப் பெறுபவர் செய்தி தொடர்பாக செயற்படும் முறை 'துலங்கல்' ஆகும். (……………..)

ஈ. கூடிய நிறை கொண்ட பொருட்களை ஆகாயவழிப் போக்குவரத்து முறைகள் மூலம் கொண்டு செல்ல முடியும். (……………..)

III. க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தோற்றவிருக்கம் வணிகத்துறை மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி பாட உள்ளடக்கங்களை தெளிவுபடுத்தும் செயலமர்வுகளை நடாத்தி வருகின்றனர். இதற்கான இணைப்புக்கள் (Link) கைத்தொலைபேசி மூலம் பகிரப்பட்டு வருகின்றது.

அ. மேற்படி செயலமர்வில் பயன்படுத்தக் கூடிய நவீன தொடர்பாடல் தொழில்நுட்பங்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

ஆ. நவீன தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செயலமர்வு நடாத்துவதினால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக.

IV. மேலைத்தேய நாடுகளில் போக்குவரத்து நெரிசல், சூழல் மாசடைதல் மற்றும் எரிபொருள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பல்வேறு மாற்றுத் தீர்வுகளை கண்டுபிடித்து அவற்றை பயன்படுத்தியும் வருகின்றனர்.

அ. எமது நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிகளுக்க உமக்கு தெரிந்த மாற்றுத் தீர்வுகள் இரண்டினை முன்வைக்குக.

ஆ. சூழல்நேய போக்குவரத்து முறைகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

**4.** I. (அ). 'சந்தைப்படுத்தல்' என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ). "உற்பத்திப் பொருள்" என்பதனால் கருதப்படுவது யாது?

II. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? என்பதனைக் குறிப்பிடுக.

அ. முகாமைத்துவமானது கருமங்கள் பலவற்றை கொண்ட தொடர்ச்சியாக நடைபெறும் செய்முறை ஒன்றாகும். (……………..)

ஆ. உற்பத்திப் பொருள் ஒன்று நுகர்வோனுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் சந்தைப்படுத்தல் செய்முறையானது நிறைவடைகின்றது. (……………..)

இ. நிலையான வைப்புச் சான்றிதழை பிணையாகக் கொடுத்து கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (……………..)

ஈ. வணிக வங்கிகளில் நடைமுறைக் கணக்கினை ஆரம்பிக்க முடியும் (……………..)

III. ஆதவன் என்பவர் க.பொ.த(உயர்தரம்) கற்று பல்கலைக்கழகத் தெரிவு கிடைக்காத மாணவனாவார் இவர் தன்னிடமிருந்த சிறு சேமிப்புப் பணமான ரூபா 50000 இனையும், தந்தையிடம் இருந்து பெற்ற ரூபா 250000 பணத்தினையும் பயன்படுத்தி யாதேனுமெரு பொருளாதார நலனைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் வினைத்திறன் கொண்ட முதலீடு ஒன்றினை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

அ. ஆதவன் பொருத்தமான முதலீட்டு வழிமுறையென்றினை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

ஆ. ஆதவன் மூலதன இலாபம் மற்றும் உயர் இலாபம் பெறவிரும்பின் அவர் எத்தகைய முதலீடுகளில் பணத்தினை முதலீடு செய்ய முடியும் என்பதற்கு இரண்டு உதாரணம் தருக.

IV. அ. நிலையான அல்லது சாதாரன சேமிப்பு கணக்கொன்றில் பணத்தை வைப்பிடுவதைவிட ஆதனங்களைக் கொள்வனவு செய்வதில் பணத்தை முதலிடுவது அனுகூலம் கூடியதாகும்.

மேற்கூறிய கூற்றுக்க சார்பான வாதங்கள் இரண்டை முன் வைக்குக.

ஆ. சேமிப்பு கணக்கொன்றினை ஆரம்பிப்பதனால் வாடிக்கையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் இரண்டு தருக

**5.** 1. அ. கடந்த கால கொடுக்கல் வாங்கல் நிகழ்வால் உருவானதும் நிறுவனத்தினால் கொடுக்க வேண்டியவை எவ்வாறு அழைக்கப்படும்? (1 புள்ளி)

ஆ. காசுப் பெறுபவனவுகளையும் காசுக் கொடுப்பனவுகளையும் பதிவதற்கு பயன்படுத்தும் மூல ஏடு எது? (1புள்ளி)

2. கீழ்வரும் விடயங்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதியப்பட்ட விதம் வருமாறு,

| | வான் | + சரக்கிருப்பு | +காசு | = | உரிமை | + வங்கிகடன் | + கடன்கொடுத.தோர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 50000 | | | = | | + 50000 | |
| 2) | | 10000 | | = | | | + 10000 |

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பெறுமானங்களுடன் விபரிக்குக. (2 புள்ளி)

3. அ. பாரத் வணிகத்தின் 31.12.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பேரேட்டுக் கணக்கு மீதிகள் வருமாறு.

கடன்பட்டோர் - 35,000
வங்கி கடன் - 40,000
விநியோக வான் - 40,000
காசு - 25,000

**வேண்டப்படுவது:**

"சொத்து = உரிமை + பொறுப்பு" என்னும் சமன்பாட்டில் பொறுமானங்களை எழுதிக் காட்டுக. (2 புள்ளி)

ஆ. மாலதி வணிகத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட இரட்டை விளைவு கீழ்வருமாறு இடம்பெற்றுள்ளது.

I. அதிகரித்தல் செலவு , குறைத்தல் வரவு
II. அதிகரித்தல் வரவு, குறைத்தல் செலவு

**வேண்டப்படுவது:**

இரட்டை விளைவிற்கு பொருத்தமான பேரேட்டுக் கணக்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4. அன்பு வணிகத்தின் 31.12.2022 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

01.01.2022 அன்பு காசாக கொண்டுவந்த மூலதனம் ரூபா 50000
05.01.2022 உடன் க.கிற்கு கொள்வனவு ரூபா 20000
12.01.2022 அமலன் இடம் பண்டங்கள் கொள்வனவு ரூபா 40,000
19.01.2022 பெற்ற காசோலை ரூ 15000 வங்கியில் வங்கியில் வைப்பு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

மேற்படி கொடுக்கல் வாங்கலுக்கு கீழ்வரும் அமைப்பு முறையினை பின்பற்றி மூல ஆவணங்களையும் மூல ஏட்டினையும் எழுதிக் காட்டுக.

| திகதி | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|
| 01.01.2022 | | |
| 05.01.2022 | | |
| 12.01.2022 | | |
| 19.01.2022 | | |

(4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**6.** 1. அ. காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வங்கியில் பராமரிக்கும் கணக்கின் பெயர் என்ன? (1 புள்ளி)

ஆ. வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதியானது ரூ. 5000மேலதிகப் பற்றாக காட்டியது எனின் மேலதிக பற்று என்றால் என்ன என்பதை விளக்குக. (2 புள்ளி)

2. ஆவணி மாதத்திற்கான வங்கி கணக்கு மீதியும் வங்கி கூற்று மீதியும் வேறுபட்டமையால் , சீராக்கிய வங்கிக் கணக்கும் கீழ் வருமாறு தயாரிக்கப்பட்டது.

**சீராக்கிய வங்கிக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 15000 | சங்கிக் கட்டணம் | 2000 |
| வைப்பு | 5000 | நிலை கட்டமைப்பு | 3000 |
| | | 31.08.2021 மீ/தி | 15000 |
| | 20000 | | 20000 |

**வேண்டப் படுவது,**

வங்கிக் கணக்கும் வங்கிக் கூற்றும் வேறுபட்டமைக்கான காரணங்களை பெறுமாணங்களுடன் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

3. அப்துல்லா வணிகத்தில் கொள்வனவு நாட்குறிப்பேடு ஜனவரி – 2022 இல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டது.

**கொள்வனவு நாட்குறிப்பேடு**

| திகதி | பட்.இல | வழங்குனர் | தொகை | தொகை |
|---|---|---|---|---|
| 05.01.22 | 67 | கலை | 40000 | |
| | | 10% வியாபார கழிவு | (4000) | 36000 |
| 08.01.22 | 102 | மலை | | 24500 |
| 12.01.22 | 11 | ஆனந்தன் | 50000 | |
| | | 5% வியாபாரக் கழிவு | 2500 | 47500 |
| 31.01.22 | | கொள்வனவு கணக்கு மாற்றியது | | 108000 |

**வேண்டப்படுவது:**

சகல கொடுக்கல் வாங்கல்களிற்கும் இரட்டைப் பதிவினை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக. ( 4 புள்ளி)

4. மாலினி வணிகத்தின் 31.12.2001 இல் முடிந்த மாதத்தில் பயிலுனர் ஒருவரால் தயாரித்த பரீட்சை மீதி பின்வருமாறு காணப்பட்டது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 40000 |
| கொள்வனவு | 70000 | |
| விற்பனைகள் | | 60000 |
| மின் கட்டணம் | 5000 | |
| முதலீட்டு வருமானம் | 2000 | |
| வங்கிக் கடன் | | 30000 |
| கடன்பட்டோர் | | 3000 |
| காசு க/கு | 54000 | |
| | | |

பரீட்சை மீதியினை சரியான முறையில் தயாரித்துக் காட்டுக.

(4 புள்ளி)

7. 1. அ. இலாப நோக்கற்ற அமைப்புகளினால் பராமரிக்கப்படும் பெறுவனவு கொடுப்பனவு கணக்கிற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடு இரண்டு தருக.

ஆ. உற்பத்திக் கிரயத்திலுள்ள உற்பத்திக் கூறுகள் இரண்டு தருக.

2. அ. வள்ளுவர் விளையாட்டுக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டுக்காக சேகரித்த சந்தா ரூபா 18000, ஆனால் ரூபா 2000 சந்தா தொகை பெறவேண்டியும் உள்ளது. இக்கழகத்தில் 40 பேர் உள்ளார்களாயின் நபர் ஒருவருக்கான ஆண்டுக்கான சந்தாக் கட்டணம் யாது?

ஆ. பாண் உற்பத்தி வணிகத்தின் மொத்த உற்பத்தி கிரயம் ரூபா 8000 குறித்த மாதத்தில் 100 இறாத்தல் பாண் உற்பத்தி செய்திருப்பின் அலகுக்கான பாணின் கிரயம் யாது?

3. சுலைமான் வணிகத்தின் 31.12.2022 இல் முடிவடைந்த நிதியாண்டில் தயாரித்திருந்த பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காப்புறுதி | 3000 | |
| வாடகை | 5000 | |
| விளம்பரம் | 2000 | |
| அ.வி.மு. கடன் | 6000 | |
| பெற்ற கழிவு | | 3000 |
| முதலீட்டு வருமானம் | | 2000 |
| நன்கொடை | 2000 | |
| கொடுத்த வங்கி கடன் வட்டி | 3000 | |
| பொறி இயந்திரம் | 150000 | |
| கடன்பட்டோர் | 44000 | |
| கடன்கொடுத்தோர் | | 25000 |
| 10% மூதலீடுகள் | 20000 | |
| 5% வங்கிக் கடன் | | 80000 |
| கொள்வனவுகள் | 45000 | |
| விற்பனைகள் | | 135000 |
| 1.1.2022 இருப்பு | 22000 | |
| உட்சுமைக்கூலி | 8000 | |
| காசு | 15000 | |
| மூலதனம் | | 70000 |
| 1.1.2022 பொறி இயந்திரம் பெறுமானத்துதேய்வுஒதுக்கம் | 30000 | |
| | **345000** | **345000** |

*31.12.2022* நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன் கீழ்வரும் விடயங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. *31.12.2022* இல் வியாபார இருப்பு ரூபா *25000.*
2. பொறி இயந்திரத்திற்கு கொள்விலையில் 10% தேய்வு செய்யப்பட வேண்டும்.
3. கடன்பட்டோரில் மேலும் ரூபா *4000* அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்க வேண்டும்.

**வேண்டப்படுவது:**

சுலைமான் வணிகத்தின் *31.12.2022* இல் முடிவடைந்த ஆண்டுக்கான

அ. வருமானக்கூற்று (4 புள்ளி)

ஆ. நிதிநிலைமைக் கூற்று (4 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளி)